Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, பிப்ரவரி 07 2024 | இதழ் 206

# ஸ்பெயின் பயணத்தால் தமிழ்நாட்டில் ரூ.3,440 கோடி முதலீட்டு ஒப்பந்தங்கள் - முதல்வர் ஸ்டாலின் பேட்டி

சென்னை, 07 பிப் 2024: ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு புதிய தொழில் முதலீடுகள் ஈர்ப்பாக தமிழ்நாட்டிற்கு 3,440 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை திரும்பிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சந்திப்பின் போது கூறியதாவது:

இது மிகப்பெரிய சாதனைப் பயணமாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டுக்கு கடந்த ஜனவரி 29 ம் தேதி சென்றேன். முதல் நிகழ்வாக, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் பங்கேற்கும் முதலீட்டாளர் மாநாடு நடந்தது. அதற்கு ஸ்பெயின் நாட்டில் இருக்கின்ற பல்வேறு தொழில்துறை குழும நிர்வாகிகள் எல்லாம் வந்திருந்தார்கள்.

ஸ்பெயின் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள், ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களை சந்தித்தேன்.

தமிழ்நாட்டில், தொழில் தொடங்குவதற்கு இருக்கக்கூடிய உகந்த சூழல் பற்றி அங்கே எடுத்துச்சொல்லி, நம்முடைய மாநிலத்தில் முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். அதன் தொடர்ச்சியாக, அடுத்தடுத்த நாட்களில் ஸ்பெயின் நாட்டில் செயல்படுகின்ற முன்னணி நிறுவனங்களுடைய நிர்வாகிகளை தனித்தனியாக நேரில் சந்தித்து கலந்துரையாடினேன்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்யவேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். சில முக்கிய நிறுவனங்களின் பெயர்களை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

1. காற்றாலை மின் உற்பத்தியிலும், நீர் மறுசுழற்சியிலும் முன்னணி நிறுவனமான ஆக்சியானா நிறுவனம்

2. உயர்தர வீட்டுக் கட்டுமான பொருட்களின் உற்பத்தியிலும், பீங்கான் பொருட்கள் உற்பத்தியிலும் உலகின் முன்னணி நிறுவனமான ரோக்கா நிறுவனம்

3. கண்டெய்னர் முனையங்கள் மற்றும் சரக்கு பூங்காக்களை அமைப்பதில் சிறந்த நிறுவனமான ஹபக்-லாய்டு நிறுவனம்

4. சர்வதேசத் தரத்தில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை அமைக்கக்கூடிய அபர்ட்டிஸ் நிறுவனம்

5. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியில் உலகின் முன்னணி நிறுவனமாக இருக்கின்ற கெஸ்டாம்ப் நிறுவனம்

6. ரெயில்வே சார்ந்த உற்பத்தி தொழிலில் உயர் தொழில்நுட்பத்துடன் செயல்படக்கூடிய டால்கோ நிறுவனம்

7. பொறியியல் வடிவமைப்பு மற்றும் பொறியியல் கல்வித்திறன் பயிற்சிக்கான நவீன கருவிகளை உற்பத்தி செய்கின்ற எடிபான் நிறுவனம்

8. உயிரியல் ஆராய்ச்சி மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனமான மேப்ட்ரீ நிறுவனம்

- ஆகிய நிறுவனங்களின் நிர்வாகிகளை எல்லாம் நான் சந்தித்தேன். இந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் எல்லோரும் தங்களுடைய தொழில் திட்டங்களையும் விளக்கியும், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தங்களுடைய ஆர்வத்தையும் தெரிவித்தார்கள்.

இந்த முயற்சிகளின் பயனாக, 3,440 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. ஹபக் லாய்டு நிறுவனம் 2500 கோடி ரூபாய் முதலீடு.

2. எடிபான் நிறுவனம் 540 கோடி ரூபாய் முதலீடு.

3. ரோக்கா நிறுவனமும் 400 கோடி ரூபாய் முதலீடு செய்வதாக உறுதியளித்திருக்கிறது.

இந்த நிறுவனங்கள் மட்டுமில்லாமல், மற்ற நிறுவனங்களும் அடுத்தடுத்து எதிர்காலத்தில் தங்களுடைய முதலீடுகளை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தமிழ்நாடு குறித்தும், கழக அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் புகழ்ந்து உலக அளவில் முக்கியப் பத்திரிகையான 'நியூயார்க் டைம்ஸ்' வெளியிட்டுள்ள செய்தியை நீங்கள் எல்லோரும் படித்திருப்பீர்கள்.

உற்பத்தித் துறையில் சீனாவுக்கு மாற்றாக, இந்தியா கருதப்பட்டு வரும் இந்த வேளையில், அந்த உற்பத்தித் துறையில் முந்திச் செயல்படுகின்ற மாநிலமாக தமிழ்நாடு முன்னேறி வருவதையும், பெரும் அளவிலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய முதலீடுகள் பல தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் அந்தச் செய்தி சுட்டிக்காட்டி இருக்கிறது. இந்தியா பயணிக்கக் கூடிய பாதையில், முந்தி பயணிப்பது மட்டுமல்ல, தமிழ்நாடு தனக்கென்று தனிப்பாதை ஒன்றை வகுத்துச் செயல்பட்டு வருவதாகவும், முதல் பக்கத்தில் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறது, அதை பாராட்டியும் இருக்கிறது. இதுபோன்ற பாராட்டுகள்தான் எங்களை மேலும் உற்சாகப்படுத்தி செயல்பட வைக்கிறது.

தமிழ்நாட்டை தொழில்துறையில் தலைசிறந்த மாநிலமாக உயர்த்தும் எங்கள் பயணத்துக்கு ஸ்பெயின் பயணம் மிகமிக பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இது போன்ற அடுத்தடுத்த பயணங்கள் திட்டமிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : தற்போது நீங்கள் வெளிநாடுகளில் பயணம் மேற்கொண்டு வரும்போது முதலீடுகள் அதிகளவு ஈர்க்கப்படுகிறது. இதற்கு அடுத்த கட்டமாக முதலீடுகளை ஈர்ப்பதற்காக, வேறு நாடுகளுக்குச் செல்ல வாய்ப்பிருக்கிறதா?

முதலமைச்சர் பதில்: திட்டமிடும்போது உங்களிடம் சொல்லிவிட்டு செய்கிறேன். நாடாளுமன்றத் தேர்தல் இப்போது நெருங்கி வருவதால், அதற்குப் பிறகுதான் என்னுடைய பயணங்கள் இருக்கும்.

கேள்வி : நாடாளுமன்றத்தில் பிரதமர் உரை நிகழ்த்தியிருக்கிறார். பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். அது தொடர்பாக, அந்த நிகழ்வுகளை எல்லாம் நீங்கள் பார்த்தீர்களா?

பதில்: பார்த்தேன், படித்தேன், ரசித்தேன், சிரித்தேன். ஏனென்றால், பிஜேபி தான் எதிர்க்கட்சி போலவும், காங்கிரஸ் ஆளுங்கட்சி போலவும், அவர் தொடர்ந்து ஆட்சிக்கு வந்ததிலிருந்து, எதிர்க்கட்சியாக அவர் செயல்பட்டுக் கொண்டு, ஆளுங்கட்சியாக காங்கிரஸ் இருப்பது போல அட்டாக் செய்வது போலவும் பேசிக் கொண்டிருக்கிறார். இதுதான் புரியாத புதிராக இருக்கிறது.

கேள்வி : பிரதம மந்திரி பேசும்போது 400 இடங்களை நாடாளுமன்ற தேர்தலில் கைப்பற்றுவோம் என்று சொல்லி இருக்கிறார்? அதுபற்றிய தங்களது கருத்து.

பதில்: மொத்தம் 400 தானா? 543 இடங்கள் இருக்கிறது. அதையும் கைப்பற்றுவேன் என்று சொன்னாலும் ஆச்சரியம் இல்லை.

கேள்வி : நடிகர் விஜய் அரசியல் கட்சித் தொடங்கி இருக்கிறார்? எப்படி பார்க்கிறீர்கள்.

பதில் : மக்களுக்குத் தொண்டாற்ற யார் வந்தாலும் நான் மகிழ்ச்சி அடைவேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறினார்.

ஸ்பெய்னில் இருந்து திரும்பும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில் கூறியிருப்பதாவது:

ஸ்பெய்னில் இருந்து தாய்த்தமிழ்நாட்டுக்குத் திரும்புகிறேன். சிறந்த ஒருங்கிணைப்புக்காக ஸ்பெய்ன் நாட்டுக்கான இந்தியத் தூதரகத்துக்கு நன்றி. புதையலைப் போல அழகிய நினைவுகளுக்காக ஸ்பெய்ன், அந்நாட்டின் அருமையான மக்கள் மற்றும் அங்கு வாழும் தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.



# அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் 14 பேர் பா.ஜ.க.வில் இணைந்தனர்

சென்னை, 07 பிப் 2024: அண்ணா தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் 14 பேர் இன்று பா.ஜ.க.வில் இணைந்தனர்.

நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் சூழலில் அரசியல் கட்சிகள் பல்வேறு வியூகங்களை வகுத்து வருகின்றன. தமிழகத்தில் கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தீவிரமாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. தமிழகத்தில் பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து அண்ணா தி.மு.க. விலகியுள்ளது. இதனால் அண்ணா தி.மு.க., பாரதீய ஜனதா கட்சிகள் இன்னும் கூட்டணியை இறுதி செய்யாமல் உள்ளது. பாமக, தேமுதிக உள்ளிட்ட கட்சிகளை தங்களின் கூட்டணிக்கு இழுப்பதற்கான பேச்சுவார்த்தையை அண்ணா தி.மு.கவும், பா.ஜ.க.வும் தொடங்கியுள்ளது.

இதனிடையே மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அளித்த பேட்டி ஒன்றில், “தமிழ்நாட்டில் தேர்தல் கூட்டணி தொடர்பான ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. கூட்டணி கதவு திறந்தே இருக்கிறது. தமிழ்நாடு ஒரு முக்கியமான மாநிலம். தேர்தல் அறிக்கையில் தமிழகம் சார்ந்த நிறைய அறிவிப்புகள் இருக்கும்” எனக் கூறியுள்ளார். அமைச்சர் அமித் ஷாவின் இந்தக் கருத்து தமிழக அரசியல் களத்தில் கவனம் பெற்றுள்ளது. அண்ணா தி.மு.க. பாரதீய ஜனதா கூட்டணி இன்னும் பட்டுப்போய்விடவில்லை என்பதை உணர்த்துவதாக இருப்பதாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஆனால் நாங்கள் பாஜகவுக்கு கூட்டணி கதவை சாத்திவிட்டோம் என்று அண்ணா தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியில் மத்திய இணை அமைச்சர்கள் ராஜீவ் சந்திரசேகர், எல். முருகன் முன்னிலையில் அண்ணா தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் 14 பேர் உட்பட பல்வேறு கட்சிகளை சேர்ந்த 18 பேர் பா.ஜ.க.வில் இணைந்தனர். இதில் காங்கிரஸ் முன்னாள் எம்.எல்.ஏ. தங்கராசும், முன்னாள் எம்.பி. ஒருவரும் அடங்குவர்.

பா.ஜ.க.வில் இணைந்த அண்ணா தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் விவரம் வருமாறு:-

கு.வடிவேல் கரூர், பி.எஸ்.கந்தசாமி அரவக்குறிச்சி, கோமதி சீனிவாசன் வலங்கைமான், ஆர்.சின்னசாமி சிங்காநல்லூர், ஆர். துரைசாமி (எ) சேலஞ்சர் துரை கோவை, எம்.வி.ரத்தினம் பொள்ளாச்சி, எஸ்.எம். வாசன் வேடச்சந்தூர், எஸ்.முத்துகிருஷ்ணன் கன்னியாகுமரி, பி.எஸ். அருள் புவனகிரி, என்.ஆர்.ராஜேந்திரன் ஆண்டிமடம், குருநாதன், வி.ஆர். ஜெயராமன் தேனி, பாலசுப்ரமணியன் சீர்காழி, சந்திரசேகர் சோழவந்தான் ஆகியோர் அடங்குவர். இவர்களுக்கு பூங்கொத்து கொடுத்து, பாரதீய ஜனதா உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும் இவர்கள் தேசிய தலைவர் ஜெ.பி.நட்டாவையும் சந்திக்க உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, வானதி சீனிவாசன், பொன்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.







PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# “நான் எப்போதுமே விஜய்யின் விசுவாசி தான்” ; ‘நினைவெல்லாம் நீயடா’ விழாவில் ஓப்பனாக பேசிய இயக்குநர் பேரரசு

# “ஆட்களை வைத்து அறிக்கை விடாமல் மக்களை நேரடியாக சந்திக்கவேண்டும் வேண்டும்” ; நடிகர் விஜய்க்கு தயாரிப்பாளர் கே.ராஜன் கோரிக்கை

# “இசைஞானியுடன் பணியாற்றுவது மிகவும் சவுகரியமான ஒன்று” ; ‘நினைவெல்லாம் நீயடா’ இயக்குநர் ஆதிராஜன்

# “பிரசவத்துக்கு 3 நாட்கள் முன்பு கூட ‘நினைவெல்லாம் நீயடா’ படத்தில் நடித்தது மறக்க முடியாத நினைவு” ; நடிகை மதுமிதா மகிழ்ச்சி

# “கமர்ஷியல் பாடல்கள் எனது முகவரி அல்ல” ; ‘நினைவெல்லாம் நீயடா’ பட விழாவில் சினேகன் சீற்றம்

*சென்னை, 07 பிப் 2024:*

லேகா தியேட்டர்ஸ் பட நிறுவனம் சார்பில் ராயல் பாபு தயாரிப்பில் இசைஞானி இளையராஜாவின் 1417வது படமாக உருவாகியுள்ள படம் "நினைவெல்லாம் நீயடா". ‘சிலந்தி’, ‘ரணதந்த்ரா’, ‘அருவா சண்ட’ ஆகிய படங்களை இயக்கிய இயக்குநர் ஆதிராஜன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார்..

பிரஜின் கதாநாயகனாக நடிக்க, மனீஷா யாதவ் ஹீரோயினாக நடிக்கிறார். "அப்பா" படப்புகழ் யுவலட்சுமி இளம் நாயகியாக அறிமுகமாகிறார். சினாமிகா இன்னொரு நாயகியாக அறிமுகமாகிறார். இளம் நாயகனாக ரோஹித் நடிக்க, முக்கிய கதாபாத்திரங்களில் மனோபாலா, மதுமிதா, இயக்குநர் ஆர்.வி.உதயகுமார், முத்துராமன், பி.எல் தேனப்பன், ரஞ்சன் குமார் ஆகியோர் நடித்துள்ளனர். ராஜா பட்டாசார்ஜி ஒளிப்பதிவு செய்ய, ஆஷிஷ் ஜோசப் படத்தொகுப்பை கவனித்திருக்கிறார். முனிகிருஷ்ணன் கலை அமைக்க சண்டை காட்சிகளை பிரதீப் தினேஷ் அமைக்க, நடன காட்சிகளை தினேஷ் மற்றும் தீனா மாஸ்டர்கள் வடிவமைத்திருக்கின்றனர். இப்படத்தின் இசை மற்றும் டிரைலர் வெளியீட்டு விழா நேற்று மாலை சென்னை சாலிகிராமம் பிரசாத் லேபில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தயாரிப்பாளர்கள் கே.ஆர், கே.ராஜன், பி.எல்.தேனப்பன், இயக்குநர்கள் ஆர்.வி.உதயகுமார், பேரரசு, கவிஞர் சினேகன், நடிகைகள் கோமல் ஷர்மா, மற்றும் படக்குழுவினர் அனைவரும் கலந்துகொண்டனர்.

இயக்குநர் ஆதிராஜன் பேசும்போது, “இந்த படத்தில் முதன்முறையாக இளையராஜா சாருடன் பணியாற்றியுள்ளேன். இசைஞானியை அணுகுவதே கடினம் என்றும் அவருடன் எளிதாக பணியாற்ற முடியாது என்றும் சொல்வார்கள். ஆனால் அவருடன் இணைந்து பணியாற்றியபோது மிகவும் சவுகரியமாக உணரும்படி எனக்கு இசையமைத்துக் கொடுத்தார் இளையராஜா. ஐந்து பாடல்களும் அற்புதமான பாடல்கள். யுவன் சங்கர் ராஜாவும் ஒரு பாடல் பாடியிருக்கிறார். மதுரையில் என்னுடைய நண்பரின் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத்தை வைத்து தான் இந்த காதல் கதையை உருவாக்கி உள்ளேன். இதில் 70 சதவீதம் உண்மை மற்றும் 30 சதவீதம் கற்பனை கலந்து கொடுத்திருக்கிறேன். எல்லோரும் பள்ளி பருவத்தைத் தாண்டி தான் வந்திருப்பார்கள். மண்ணுக்குள் போகும் வரை யாராலும் மறக்க முடியாத ஒரு விஷயம் முதல் காதல். அதை வைத்து தான் இந்த படத்தை உருவாக்கி இருக்கிறேன்” என்று கூறினார்.

இளம் நாயகி யுவலட்சுமி பேசும்போது, “நீண்ட காத்திருப்புக்குப் பிறகு ‘நினைவெல்லாம் நீயடா’ படத்தின் இசை வெளியீட்டு விழா நடந்திருப்பது ரொம்பவே மகிழ்ச்சியாக இருக்கிறது. இசைஞானியின் இசையில் நான் நடிக்கும் மூன்றாவது படம் இது. அதை பெருமைக்குரிய விஷயமாக நினைக்கிறேன். பள்ளிக் காதல் என்பது மறக்க முடியாத ஒரு விஷயம் தான். எல்லாருமே அதைக் கடந்து வந்திருப்போம். இதை மையப்படுத்தி ஆதிராஜன் இந்தக் கதையை உருவாக்கியுள்ளார். அதில் நானும் ஒரு பாகமாக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்” என்று கூறினார்.

நடிகை மதுமிதா பேசும்போது, “‘நினைவெல்லாம் நீயடா’ படம் வாழ்நாள் நாள் முழுவதும் என் நினைவில் இருந்து கொண்டே இருக்கும். அதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. என்னுடைய பிரசவத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு வரை கூட இதன் படப்பிடிப்பில் நடித்து வந்தேன். இயக்குநர் ஆக்சன் என்று மைக்கில் சொல்லும்போது அந்த அதிர்வை கேட்டு என் வயிற்றில் உள்ள குழந்தை என்னை எட்டி உதைப்பான். அதை மறக்கவே முடியாது. பத்திரிகையாளரும்




நடிகருமான தேவராஜ் என்னோடு நடிக்கும்போது, எத்தனையோ டெடிக்கேசனான நடிகைகளைப் பார்த்திருக்கேன். ஆனா மூணு நாள்ல டெலிவரியை வச்சிக்கிட்டு நடிக்கிற ஒரு நடிகையை இப்போதான் பார்க்கிறேன் எனப் பாராட்டினார். எனக்குக் கிடைத்த முக்கியமான வாழ்த்தாக அதைப் பார்க்கிறேன். ஒவ்வொரு இயக்குநருக்கும் ஒரு படம் உருவாகி வெளியாகும் வரை ஒரு பேறுகாலம் போலத்தான். பெண்களுக்கு உள்ள அத்தனை அவஸ்தைகளும் அவர்களுக்கும் உண்டு. அந்த வகையில் இயக்குநர் ஆதிராஜனுக்கு நல்ல வெற்றியைத் தரக்கூடிய ஒரு குழந்தையாக இப்படம் இருக்கும் என மனதார வாழ்த்துகிறேன்” என்று கூறினார்.

இரண்டாவது நாயகன் ரோஹித் பேசும்போது, “2013ல் இருந்து சின்ன சின்ன கதாபாத்திரங்களில் நடித்து வந்தேன். 2021ல் இயக்குநர் ஆதிராஜன் என்னை அழைத்து இதில் கதாநாயகனாக நடிக்கிறாயா என்று கேட்டார். அந்த விதமாக இப்போதுதான் ஒரு மெயின் கேரக்டரில் நடித்துள்ளேன்” என்று கூறினார்.

இரண்டாம் நாயகி சினாமிகா பேசும்போது, “இளையராஜா இசையில் நடிக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் ஒரு கனவாக இருக்கும். என்னுடைய ஆசையும் இந்த படத்தில் தான் நிறைவேறி இருக்கிறது. அவருடைய இசைமேல் எனக்கு அவ்வளவு காதல் இருக்கிறது. அவரது பாடல்களைக் கேட்டுத்தான் நான் வளர்ந்திருக்கிறேன். என்னுடைய முதல் படமே இசைஞானி இசையில் நடிக்க வாய்ப்பு கொடுத்த இயக்குநர் ஆதிராஜனுக்கு நன்றி” என்று கூறினார்.

நடிகை கோமல் ஷர்மா பேசும்போது, “உலகத்தில் உள்ள நல்ல விஷயங்கள் எதையும் தொட முடியாது, கண்ணால் பார்க்க முடியாது என அமெரிக்காவைச் சேர்ந்த ஹெலன் கெல்லர் என்பவர் கூறியுள்ளார். இசையும் காதலும் அதுபோலத்தான். இசைஞானியின் இசையும் காதலும் என இரண்டு அற்புதமான விஷயங்கள் இப்படத்தில் இருக்கின்றன. இப்போது காதல் படங்கள் அதிகம் வருவதில்லை. அந்தக் குறையை இப்படம் போக்கும்” என்று கூறினார்.

தயாரிப்பாளர் கே ராஜன் பேசும்போது, “ஆதிராஜன் நீண்ட நெடுங்காலமாகவே என்னுடைய தம்பியாக உடன் வருபவர். அவர் பத்திரிகையாளராக இருக்கும்போது சில புரட்சிகள் செய்தவர். நான் சில முறை ஜெயிலுக்கு போவதற்கும் அவர்தான் காரணம். ஒரு பத்திரிகையாளராக இருந்ததால் ஒரு படத்தின் தோல்விக்கான அம்சங்கள் என்ன என்பதைத் தெரிந்து 'சிலந்தி' படத்தை இயக்கி வெற்றி பெற்றார். 'நினைவெல்லாம் நீயடா' படத்திற்கு இசைஞானி இளையராஜா இசையமைக்க ஒப்புக்கொண்டிருக்கும்போதே படம் எப்படி இருக்கும் என்பது பற்றி சொல்லத் தேவையில்லை. மரியாதை குறைவான டைட்டிலாக இருந்தாலும் காதலின் நெருக்கத்தை சொல்வதற்கு பொருத்தமான டைட்டில் தான். இப்படத்தில் இளம் ஜோடிகளைப் பார்க்கும்போது 'அலைகள் ஓய்வதில்லை' கார்த்திக், ராதாவை பார்ப்பது போல இருக்கிறது.

இப்போது வரை சூப்பர் ஹீரோவாக இருக்கும் நடிகர் விஜய் ஒரு புதிய கட்சியைத் தொடங்கி இருக்கிறார். தமிழ் திரையுலகம் சார்பில் அவரை வாழ்த்துகிறேன். அவர் வெற்றி பெற வேண்டும் என்றால் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் செய்த தொண்டுகளில் 15 சதவீதமாவது செய்ய வேண்டும். மக்களிடம் இறங்கி வர வேண்டும். மேடையில் இருந்து கொண்டு புஷ்ஸி ஆனந்தை அறிக்கை விடச் சொன்னால் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். 200 கோடி சம்பளத்தையும் வேண்டாம் எனக் கூறி மக்களுக்காக இறங்கி இருக்கிறார் என்றால் உண்மையிலேயே அவர் நல்லது செய்வார் என நம்புவோம்” என்று கூறினார்.

இயக்குநர் பேரரசு பேசும்போது, “இங்கே சரியான தலைவர்கள் நிறைய பேர் இல்லை. விஜய் ஒரு நல்ல தலைவராக வர வேண்டும் என எதிர்பார்ப்போம். நான் என்றுமே விஜய்யின் விசுவாசி தான். அவர் பெரிய தலைவராக வர வேண்டும். இப்படத்தின் டிரைலரை பார்க்கும்போது எனக்கு 'பன்னீர் புஷ்பங்கள்' படம் ஞாபகத்திற்கு வந்துவிட்டது. நம்மை பள்ளி காலகட்டத்திற்கு அழைத்துச் சென்று விட்டது. இளையராஜாவின் 1417வது படம் இது. இந்த சாதனையை இசைஞானி ஒருவரால் தான் செய்ய முடியும். நாம் சோகமாக இருக்கும் போதெல்லாம் அவருடைய பாடல்களைக் கேட்டு ஆறுதல் அடைந்தோம். இன்று அவர் வீட்டில் துக்கம்.. ஆண்டவன் தான் அவருக்கு ஆறுதல் தரவேண்டும். படத்தில் நடித்துள்ள யுவலட்சுமிக்கு நடிகை சுவலட்சுமியின் குடும்பப் பாங்கான தோற்றம் அப்படியே இருக்கிறது. காதலித்து தோல்வி அடைந்தவர்கள் அப்படியே அந்த பசுமையான நினைவுகளுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். 20 வருடங்களுக்குப் பிறகு காதலியைப் போய் பார்க்கலாம் என்று நினைத்தால் உங்களுக்கு அவரது தோற்றத்தைப் பார்த்து அதிர்ச்சி தான் கிடைக்கும். அதன் பிறகு மனதில் பசுமையான நினைவுகள் எதுவுமே வராது” என்று கூறினார்.

இயக்குநர் ஆர்.வி உதயகுமார் பேசும்போது எல்லா உணர்வுகளுக்கும் இசை கொடுத்தவர் இசைஞானி இளையராஜா. இந்த காதல் உணர்வு எல்லாம் அவருக்கு சாதாரண விஷயம். படத்தின் நாயகி யுவலட்சுமிக்கு இந்த பாடல் மூலமாகவே மிகப்பெரிய ரீச் கிடைக்கும். முன்பெல்லாம் நாங்கள் தயாரிப்பாளர்களின் இயக்குநர்களாக இருந்தோம். இப்போதைய காலம் நடிகர்களின் தயாரிப்பாளர்களாக அவர்கள் மாறிவிட்டார்கள். முதன்முறையாக இளையராஜா தனது ஆடியோ உரிமையை எடுத்துக் கொள்ளாமல் இவர்களிடமே கொடுத்துவிட்டார். அதுதான் இளையராஜா. விஜய் சாரைத் தொடர்ந்து எல்லா நடிகர்களும் ஒரு கட்சி ஆரம்பித்தால் நன்றாக இருக்கும் நமக்கெல்லாம் நிறைய வேலை கிடைக்கும்” என்று கூறினார்.

பாடலாசிரியர் சினேகன் பேசும்போது, “ஆதிராஜன் நான் பாடல் எழுத துவங்கிய காலகட்டத்தில் இருந்து எனக்கு நெருங்கிய நண்பர். அவரது தொடர் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகத் தான் இந்த “நினைவெல்லாம் நீயடா” படம் வந்திருக்கிறது. இதில் மூன்று பாடல்கள் எழுதி இருக்கிறேன். இதுவரை நான் 3000 பாடல்கள் எழுதி இருந்தாலும் அதில் 30 பாடல்கள் தான் கமர்சியல் பாடல்கள். 500 பாடல்களாவது மிகச்சிறந்த பாடல்கள் ஆக இருக்கும் என நான் நம்புகிறேன். இந்தப் பாடல்களைத் தூக்கி விமர்சனம் செய்ய விரும்பாத இந்த சமூகம் என்னுடைய கமர்சியல் பாடல்களை எடுத்து விமர்சனம் செய்து கொண்டு, ‘இதுதான் சினேகன்’ என்று சொல்லும்போது எனக்கு வலிக்கிறது. நானும் கதைக்கு பாடல் எழுத வேண்டும் என்று தான் ஓடி வந்தேன். இந்த சினிமா என்னை சதைக்கு பாடல் எழுத வைத்து விட்டது. என்னுடைய முகவரி அது அல்ல. என்னுடைய முதல் படத்திலேயே விருது வாங்கியவன் நான். இந்த சமூகம் ஏன் நல்ல விஷயத்தை எடுத்துக் கொண்டாட மாட்டேன் என்கிறது? காதல் மரியாதையை எதிர்பார்ப்பதில்லை. அப்படி எதிர்பார்த்தால் அது காதலும் இல்லை. இங்கே தோற்பது காதலர்கள் தானே தவிர காதல் ஒருபோதும் தோற்காது: என்று கூறினார்.

இயக்குநர் கே.ஆர் பேசும்போது, “இந்த விழாவில் கலந்து கொண்ட எல்லோரும் ஏதோ பேச வேண்டும் என்று நினைத்து தங்களை அறியாமல் உண்மையை பேசி உள்ளார்கள். ஒரு பட்டிமன்றம் ஆகவே இந்த விழா மாறிவிட்டது. ஆதிராஜனை எனக்கு ஆதி காலத்திலிருந்தே தெரியும். பத்திரிகை துறையில் இருந்து அவர் இயக்குநராக வந்திருந்தாலும் பல போராட்டங்களைத் தாண்டித்தான் இந்த இடத்தில் நிற்கிறார். இளையராஜாவால் தமிழ் சினிமாவுக்கு மட்டுமல்ல.. தமிழ் நாட்டுக்கே பெருமை. அப்படி ஒரு இசை மேதை இல்லை என்றால் இன்று நம் சினிமா எப்போதோ செத்துப் போய் இருக்கும்” என்று கூறினார்.

நாயகன் பிரஜின் பேசும்போது, “முதல் காதல், முதல் முத்தம் என எல்லாமே ஞாபகம் இருக்கும். வரும் பிப்ரவரி 14 வந்தால் எங்களது காதலுக்கு பதினாறு வருடம். எனக்கு இரண்டு குழந்தைகள் (ட்வின்ஸ்) உள்ளனர். என் அம்மா அப்பாவைத் தாண்டி இந்த இடத்திற்கு நான் வர மிகவும் ஆதரவாக இருந்தவர் என் மனைவி சாண்ட்ரா. இந்தப் படத்தில் இயக்குநர் ஆதிராஜன் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் அழகாகப் பார்த்துப் பார்த்து செதுக்கியுள்ளார். முதல்முறையாக இந்த படத்தின் பூஜையின் போது தான் நான் இளையராஜா சாரை பார்த்தேன். அவரைப் பார்த்த போது பேச்சே வரவில்லை. எப்போதும் காதல் தோல்வி அடைந்தது இல்லை.. அதே போல காதல் படமும் தோல்வி அடையாது” என்று கூறினார்.

தயாரிப்பாளர் ராயல் பாபு பேசும்போது, “ஆதிராஜன் என்னிடம் இப்படத்தின் கதையை சொல்லும்போதே முதல் காதலை கொண்ட ஒரு திரைப்படம் என்று சொன்னார். எனக்கு ரொம்பவே கதை பிடித்து இருந்தது. படத்திற்கு பூஜை போடுவதற்காக எங்கெங்கோ இடம் தேடி அலைந்தபோது இசைஞானி இளையராஜா எங்களை அழைத்து எங்கேயும் போக வேண்டாம் என்னுடைய இடத்திலேயே பூஜையை நடத்துங்கள் என்று கூறி இடம் கொடுத்தார். ஒரு புது தயாரிப்பாளராக எனக்கு அவர் கொடுத்த மரியாதை மிகப் பெரிய சந்தோஷம்” என்று கூறினார்.

# ஷாம் நடிக்கும் ‘அஸ்திரம்’ படத்தின் பர்ஸ்ட் லுக்கை வெளியிட்ட இயக்குநர் வெங்கட் பிரபு, வம்சி, கிச்சா சுதீப், ஆர்யா, சாயேஷா உள்ளிட்ட 40 க்கும் மேற்பட்ட பிரபலங்கள்

*சென்னை, 07 பிப் 2024:* பெஸ்ட் மூவிஸ் சார்பில் தன சண்முகமணி தயாரிப்பில் , நடிகர் ஷாம் கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்திற்கு 'அஸ்திரம்' எனப் பெயரிட்டுள்ளனர். கிரைம் இன்வெஸ்டிகேஷன் திரில்லராக உருவாகும் இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் அரவிந்த் ராஜகோபால் இயக்குகிறார். கதாநாயகியாக மாடலிங் துறையைச் சேர்ந்த நிரஞ்சனி நடிக்க, முக்கிய வேடங்களில் நிழல்கள் ரவி, ஜீவா ரவி, அருள் டி.சங்கர் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.

'ஐரா', 'எட்டு தோட்டாக்கள்', 'பொம்மை நாயகி' ஆகிய படங்களுக்கு இசையமைத்த சுந்தரமூர்த்தி 'அஸ்திரம்' படத்திற்கு இசையமைக்கிறார். விரைவில் வெளியாக உள்ள 'ரேஞ்சர்', 'ஜாக்சன் துரை 2' படங்களில் ஒளிப்பதிவாளராக பணியாற்றிய கல்யாண் இந்த படத்திற்கு ஒளிப்பதிவு செய்ய, 'இறுதிச்சுற்று', 'சூரரைப்போற்று' படங்களில் துணை படத்தொகுப்பாளராக பணியாற்றிய பூபதி இப்படத்தின் மூலம் படத்தொகுப்பாளராக அறிமுகம் ஆகிறார். கலை வடிவமைப்பை ராஜவேல் கவனிக்க, சண்டைப் பயிற்சியாளராக முகேஷ் பொறுப்பேற்றுள்ளார்.

இன்று இப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை இயக்குநர்கள் வெங்கட் பிரபு, வம்சி நடிகர்கள் கிச்சா சுதீப், ஆர்யா, சாயேஷா உள்ளிட்ட 40 க்கும் மேற்பட்ட திரை பிரபலங்கள் வெளியிட்டனர்.




கடந்த பத்து வருடங்களாக குறும்படங்களில் நடித்து, பின்னர் 'என் பெயர் ஆனந்தன்' உள்ளிட்ட படங்களிலும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து அனுபவம் பெற்றவர் இப்படத்தின் இயக்குநர் அரவிந்த் ராஜகோபால். படம் குறித்து இயக்குநர் அரவிந்த் ராஜகோபால் கூறும்போது, "கொரோனா காலகட்டத்தில் 30 நிமிடம் கொண்ட ஒரு பைலட் ஃபிலிம் ஆக இதை உருவாக்கும் வேலைகளில் இறங்கினோம். கதை நன்றாக இருக்கவே இதை திரைப்படமாக மாற்ற முடிவு செய்தோம். இதன் கதையை எழுதியுள்ளார் கதாசிரியர் ஜெகன். இந்த படம் கிரைம் இன்வெஸ்டிகேஷன் திரில்லராக உருவாகியுள்ளது.

நடிகர் ஷாம் போலீஸ் அதிகாரி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். 'ராட்சசன்', 'போர் தொழில்' பாணியில் இந்தப் படமும் விறுவிறுப்பான துப்பறியும் படமாக உருவாகியுள்ளது. இந்த படத்தின் கதையை சொல்வதற்காக நடிகர் ஷாமை சோசியல் மீடியா மூலமாக மெசேஜ் அனுப்பி தொடர்பு கொண்டேன். என்னை யார் என்றே தெரியாத நிலையில் என்னுடைய பேச்சிலேயே நம்பிக்கை வைத்து என்னை தனது அலுவலகத்திற்கு அழைத்து கதை கேட்டு உடனேயே நடிப்பதற்கும் சம்மதமும் தெரிவித்தார். தனக்கு இந்த படம் வெற்றிகரமான ரீ எண்ட்ரி கொடுக்கும் படமாக இருக்கும் என அவர் நம்புவதால் கூடுதல் அர்ப்பணிப்புடன் இந்த படத்தில் பணியாற்றியுள்ளார். கொடைக்கானல் மற்றும் சென்னை உள்ளிட்ட பகுதிகளில் கிட்டத்தட்ட 30 நாட்கள் இந்த படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றது.

நடிகர்கள் ஆர்யா, சுதீப், சாயேஷா, இயக்குநர்கள் வெங்கட் பிரபு, வம்சி உள்ளிட்ட பலர் நடிகர் ஷாம் மீது கொண்ட நட்பின் காரணமாக இன்று (பிப்-4) இந்த படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை தங்களது சோசியல் மீடியா பக்கத்தில் வெளியிட்டனர். இவர்களுடன் இணைந்து, இயக்குநர் அரவிந்த் ராஜகோபால் மீது கொண்ட நட்பினால் நாற்பதுக்கும் மேற்பட்ட நடிகர்கள், இயக்குநர்கள் தங்கள் அஸ்திரத்தின் முதல் பார்வையை தங்கள் வலைத்தளங்களில் பதிவுசெய்துள்ளனர். விரைவில் படத்தின் இசை வெளியீட்டு விழா மற்றும் ரிலீஸ் தேதி குறித்த விவரங்கள் அறிவிக்கப்படும்" என்று கூறினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் ஃபைனான்ஸ் இந்தியாவின் நிதியாண்டு 2024 - ன் 9 மாதங்கள் கால அளவிற்கான நிதிசார் முடிவுகள்

சென்னை, 07 பிப் 2024: சிறப்பான நிதிசார் முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்த இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் பி. பாலாஜி கூறியதாவது: "நிதியாண்டு 24-ன் 9 மாதங்கள் காலஅளவின்போது, 31 கிளைகளை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். மொத்தத்தில் 262 கிளைகள் கொண்ட ஒரு வலுவான வினியோக வலையமைப்பின் மூலம் எமது செயலிருப்பை மேலும் விரிவுபடுத்தியிருக்கும் நாங்கள், எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் மிகச்சிறந்த சேவைகளுக்கான உத்தரவாதத்தை வழங்குகிறோம். இந்த காலஅளவின்போது ரூ.2159 கோடி ரூபாயை கடனாக நாங்கள் வினியோகித்திருக்கிறோம். முந்தைய ஆண்டின் இதே கால அளவுடன் ஒப்பிடுகையில், 25% வளர்ச்சியினை இதன்மூலம் நாங்கள் பதிவு செய்திருக்கிறோம். தொடர்ந்து நிலையாக வளர்ச்சி கண்டு வரும் நாங்கள், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 28% ஏ யூ எம் வளர்ச்சியை சாதித்திருக்கிறோம். டிஜிட்டல் முறையிலான செயல்பாடுகள் தொடர்ந்து வலுவாக இருந்து வருகின்றன. வாடிக்கையாளர் பரிந்துரைப்பு செயலி, எக்கோ பார்ட்னர்ஸ் செயலி மற்றும் சமூக ஊடக சேனல்கள் வழியாக திரட்டப்படும் தரவுகள் மற்றும் தகவல்களின் வழியாக, பிசினஸ் உருவாக்கத்தில் நிலையான மேம்பாடு இருந்து வருகிறது. வாடிக்கையாளரை மையமாக கொண்ட எமது டிஜிட்டல் செயல்தளமும் மற்றும் ஏ ஐ/எம் எல் ஆதரவுடன் இயங்கும் கிரெடிட் / மதிப்பாய்வு செயல்முறையிலும் உரிய நேரத்திற்குள் விரைவாகவே எமது வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் வினியோகிக்கப்படுவதை உறுதிசெய்கிறது. கடந்த பல ஆண்டுகளாகவே வராக்கடன் எனப்படும் செயல்படா சொத்துக்களை குறைவான அளவிலேயே நாங்கள் தொடர்ந்து பராமரித்து வந்திருக்கிறோம். 2023 டிசம்பர் 31 அன்று மொத்த என் பி ஏ - ன் அளவு 1.19% என குறைந்திருப்பது சொத்துக்களின் நல்ல தரத்தை சுட்டிக்காட்டுகிறது. வரிக்குப் பிந்தைய லாபம், முந்தைய ஆண்டின் இதே கால அளவோடு ஒப்பிடுகையில் 22% மற்றும் காலாண்டு அடிப்படையில் 6% உயர்ந்திருக்கிறது. எமது ஆர் ஒ ஏ மற்றும் ஆர் ஒ ஈ ஆகியவை முறையே 8.06% மற்றும் 17.10% என்ற அளவுகளில் தொடர்ந்து வலுவாக இருந்து வருகின்றன. 2023 டிசம்பர் 31 அன்று ரூ.961 கோடி என்ற போதுமான பணப்புழக்க அளவை நாங்கள் கொண்டிருந்தோம். என் எச் பி - ன் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இன்னும் பயன்படுத்தப்படாத ரூ.300 கோடி மற்றும் பல்வேறு வங்கிகளிலிருந்து ஆகியவையும் இதில் உள்ளடங்கும். ரூ.3700 கோடிக்கும் அதிகமான நிகர மதிப்பைக் கொண்டு சிறப்பான மூலதனம் கொண்ட நிறுவனமாக இது திகழ்கிறது. நிறுவனத்தை வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்காக, விற்பனை, கிரெடிட், கடன் வசூல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் நடுத்தர நிர்வாக பணியாளர்கள் குழு மேலும் வலுப்படுத்தப்பட்டிருக்கிறது.

தற்போது இயங்கி வரும் அமைவிடங்களிலும் மற்றும் புதிய இடங்களிலும் எமது வாடிக்கையாளர் அடித்தளத்தை மேலும் விரிவாக்குவது குறித்து நாங்கள் சிறப்பு கவனம் செலுத்துவோம். இந்நாட்டில், பலரும் பயன்படுத்தி பயன்பெறக்கூடிய வீட்டுவசதி கடன் நிறுவனங்களுள் முதன்மை நிறுவனமாக எமது தற்போதைய நிலையை இனிவரும் காலங்களில் நாங்கள் மேலும் வலுப்படுத்துவோம்.

# பூமியின் நக்ஷத்ரா விளையாட்டு நிகழ்வு திறமை மற்றும் வட சென்னை, மத்திய மற்றும் தென் சென்னையில் உள்ள 21 சமூக மையங்களில் உள்ள 900 க்கும் மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை உள்ளடக்கி, பல்வேறு விளையாட்டுகளில் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தியது



சென்னை, 07 பிப் 2024: இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ அமைப்பான பூமி, நக்ஷத்ரா ஸ்போர்ட்ஸ் 2024 ஐ வெளிப்படுத்தியது, இது பிப்ரவரி 4, 2024 அன்று டான் போஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி, டிகாஸ்டர் ரோடு, புளியந்தோப், சென்னை 600012 இல் நடைபெற்றது. பூமியின் இணை நிறுவனர் டாக்டர் பிரஹலாதன் கே கே மற்றும் பூமியின் நிர்வாக இயக்குனர் திருமதி வைஷ்ணவி சீனிவாசன் ஆகியோரால் நடத்தப்படும் இந்த வகையான நிகழ்வு, விளையாட்டுத்திறனை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது, பின்தங்கிய குழந்தைகளுக்கு வெளிப்படுதல் மற்றும் பல்வேறு விளையாட்டுகள் மூலம் முழுமையான வளர்ச்சிக்கான தளத்தை உருவாக்குகிறது. நக்ஷத்ரா ஸ்போர்ட்ஸ், பூமியின் இக்னைட் சமூகக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டு, வட சென்னை, மத்திய மற்றும் தென் சென்னையில் உள்ள 21 சமூக மையங்களில் உள்ள 900 க்கும் மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை உள்ளடக்கி, பல்வேறு விளையாட்டுகளில் அவர்களின் திறமைகளை கண்டறிய அவர்களை ஊக்குவிக்கும். லார்சன் & டூப்ரோ, மேவரிக், டி எஸ் வி, வி எம் வேர், கைரோ மற்றும் ஆஷா ஆல் ஆதரிக்கப்படும் இந்த நிகழ்வு, 100மீ, 200மீ, மற்றும் 4ஜ்100மீ ரிலே போன்ற டிராக் நிகழ்வுகள் உட்பட, பரந்த அளவிலான செயல்பாடுகளை உள்ளடக்கியது; நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் சாக் ரேஸ் போன்ற கள நிகழ்வுகள்; சதுரங்கம், கேரம் மற்றும் எலுமிச்சை ஸ்பூன் போன்ற உட்புற விளையாட்டுகள்; மற்றும் குழு விளையாட்டுகளான கபடி, கோ-கோ, த்ரோபால் மற்றும் கால்பந்து. இந்த நிகழ்வில் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட பூமியின் நிர்வாக இயக்குநர் திருமதி. வைஷ்ணவி சீனிவாசன், "அரிதாக இதுபோன்ற வாய்ப்புகளை சந்திக்கும் குழந்தைகளுக்கு இந்த முயற்சி முக்கியமானது. நக்ஷத்ரா ஸ்போர்ட்ஸ் இந்த குழந்தைகள் தங்கள் திறன்களை வெளிப்படுத்தவும், தன்னம்பிக்கையை வளர்க்கவும் மற்றும் நடைமுறையில் உள்ள பாலின நிலைப்பாடுகளை சவால் செய்யவும் ஒரு தளமாகும். நக்ஷத்ரா போன்ற நிகழ்வுகள், அறிவுஜீவிகளை மட்டுமல்ல, பின்தங்கிய குழந்தைகளின் உடல் மற்றும் உணர்ச்சி நல்வாழ்வையும் வளர்ப்பதில் பூமியின் உறுதிப்பாட்டை நிலைநிறுத்துகின்றன. அவர்களின் வாழ்க்கையில் விளையாட்டின் நேர்மறையான தாக்கத்தை காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பூமி தன்னார்வலரால் இயக்கப்படும் மாதிரியில் செயல்படுகிறது, சமூகத்தைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் உட்பட இந்த தன்னார்வலர்கள் குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பது மட்டுமல்லாமல், குழுப்பணி, சுய ஒழுக்கம் மற்றும் விளையாட்டுத்திறன் ஆகியவற்றின் மதிப்புகளையும் வளர்க்கிறார்கள். 100 க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் நக்ஷத்ரா ஸ்போர்ட்ஸின் வெற்றிக்கு பங்களிக்கின்றனர், தளவாடங்கள் முதல் நிகழ்வு செயல்பாடுகள் வரை அனைத்தையும் நிர்வகிக்கின்றனர்.

# க்ளியர்ட்ரிப் புதிய கார்ப்பரேட் பயண மேலாண்மை தயாரிப்பான 'அவுட் ஆஃப் ஆபீஸ் (OOO) கார்ப்பரேட் பயணத்தில் ஒரு புதிய மாற்றத்திற்கான தீர்வு

cleartrip
A Flipkart Company

சென்னை, 07 பிப் 2024: பிளிப்கார்ட் நிறுவனமான க்ளியர்ட்ரிப், கார்ப்பரேட் டிராவல் ஸ்பேஸுக்கு இணையாக இருக்க திட்டமிட்டுள்ளது, மேலும் அதன் புதிய கார்ப்பரேட் டிராவல் மேனேஜ்மென்ட் தயாரிப்பான - அவுட் ஆஃப் ஆபீஸ் (OOO) -ஐ அறிமுகப்படுத்துவது இந்தப் பயணத்தின் ஆரம்பமாகும் . இந்த தனித்துவமான கார்ப்பரேட் பயண முன்பதிவு கருவி - ளிளிளி ஆனது சிறிய, நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. 300 எஸ் எம் ஈ-கள் உள்வாங்கப்பட்டு, ~10 பெரிய மற்றும் நிறுவன நிறுவனங்கள் தீவிரமான மாற்றத்தினை செய்து வருகின்றன, இந்த தளம் மாதாந்திர வணிகமாக ரூ 20 கோடியை செயல்படுத்திக்கொண்டிருக்கிறது .

இத்தளத்தின் நெகிழ்வான கட்டமைப்பு மற்றும் வாடிக்கையாளர்கள் இடையேயான வடிவமைப்பு பெரிய நிறுவனங்கள் மற்றும் எஸ் எம் ஈ வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய தடையற்ற உள்ளமைப்பு சேவையை செயல்படுத்துகிறது. ஒவ்வொரு வணிகத்தின் தனிப்பட்ட பயண செயல்பாட்டை செயல்படுத்துவதே ளிளிளிவின் அடிப்படைக் கொள்கையாகும்.

OOO தளத்தின் ஆரம்ப நிலைப் பின்பற்றுபவர்களில் தி ஃபெடரல் வங்கி, சிஃபி டெக்னாலஜிஸ், எம்ஜிஎம் ஹெல்த்கேர், ஸ்டெர்லைட் பவர் டிரான்ஸ்மிஷன் லிமிடெட் மற்றும் ஏசிசி லிமிடெட் போன்ற புகழ்பெற்ற நிறுவனங்கள் ஆகும் . ளிளிளி வின் நிகழ்நேரத்தில் கொள்கைகளை மாற்றும் அல்லது உருவாக்கும் திறன், பயணச் சலுகைகளுடன் ஒருங்கிணைந்த பயணச் செலவு, சுய-ஒப்பந்த கார்ப்பரேட் கட்டணங்களை அணுகும் திறன், நிகழ்நேர விலைப்பட்டியல் ஆகியவை மற்றவைகளை ஒப்பிடும் போது தனித்திறமை மிக்கதாக இருக்கின்றது . அதுத்தபடியாக ஐ ஓ எஸ் மற்றும் ஆண்ட்ராய்ட்-க்கான நேட்டிவ் ஆப்ஸ் விரைவில் வெளியிடப்பட உள்ளது.

இதன் முன்னேற்றத்தை குறித்து கிளியர்டிரிப்-ன் சி ஈ ஓ அய்யப்பன் ஆர் கூறுகையில் , "உலகளவில் வணிகங்கள் குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சியை கண்டுக்கொண்டிருக்கிறது , கார்ப்பரேட் பயணத்திற்கான தேவை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்திருப்பதைக் காண்கிறோம் . இந்தச் சூழ்நிலையில், 'அவுட் ஆஃப் ஆபீஸ்' (OOO)அனைத்திற்கும் ஒரு முக்கிய தீர்வாக செயல்படுகிறது . இது வழக்கமான தளங்களைப் போலல்லாமல், ஒரு இறுதி முதல் இறுதி பயண அனுபவம் , வாடிக்கையாளர்கள் இடையேயான வடிவமைப்பு, கொள்கை பின்பற்றுதல் மற்றும் செலவு-செயல்திறன்-அனைத்தும் ஒரு விரிவான தொகுப்பில் வழங்குகிறது. ளிளிளி, தற்போதைய தேவை அதிகரிப்புக்கு மட்டுமல்லாமல், வணிகங்கள் கார்ப்பரேட் பயணத்தை எவ்வாறு அணுகுகின்றன என்பதை மறுவரையறை செய்யவும் உதவுகிறது.

"OOO என்பது நிறுவனத் தேவைகளுக்கு விரைவாக மாற்றியமைக்கும் ஒரு பிளக்-அண்ட்-பிளே தீர்வாகும். இது பல முன்பதிவு நடத்தைகளை (சுய-முன்பதிவு, பயண முன்பதிவு) மற்றும் பலதரப்பட்ட விஷயங்களை ஒரே நிகழ்வில் நிர்வகிக்க முடியும். OOO கருவியின் கவனம் 30% முன்பதிவுகளில் மற்றும் 70% பாலிசியில் கடைபிடிக்கப்படுகிறது. குறிப்பாக, ஹோட்டல் இன்வாய்ஸ்களை வாங்குவதை செயல்படுத்துவதன் மூலம் கார்ப்பரேட்டுகளுக்கு பாரத்தை இந்த கருவி நிவர்த்தி செய்கிறது.

# ஐ ஏ ஜி ஈ எஸ், அறுவை சிகிச்சை ரோபோக்களின் தயாரிப்பாளர்களுடன் கூட்டு சேர்ந்து சென்னையில், அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கான சர்வதேச மாநாடு மற்றும் ஃபெல்லோஷிப் திட்டத்தையும் நடத்துகிறது




சென்னை, 07 பிப் 2024: உலகின் முன்னணி அறுவை சிகிச்சை நிபுணர்களின் அமைப்புகளில் ஒன்றான இந்தியன் அஸோசியேஷன் ஆஃப் கேஸ்ட்ரோ இன்டெஸ்டினல் எண்டோ சர்ஜன்ஸ் (ஐ ஏ ஜி ஈ எஸ்), சென்னையில் தங்களின் 21வது தேசிய மாநாட்டை நடத்துவதற்கு ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற தொழில்நுட்பத் தலைவர்களுடன் ஒன்றிணைந்தனர். இந்த நான்கு நாள் மாநாடு, புதுமை, பாதுகாப்பு மற்றும் தனிச்சிறப்பு, மற்றும் ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சை போன்ற அதி நவீன அறுவை சிகிச்சை தொழில்நுட்பங்களில் உடல்நல பாதுகாப்பு நிபுணர்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. இந்த மாநாடு, இரைப்பை குடல் இயல் மற்றும் பொது அறுவை சிகிச்சை துறையில் லேப்ராஸ்கோபிக் மற்றும் ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சையின் பணிச்சூழலியல் மீது கவனம் செலுத்துகின்ற 11 க்கும் மேற்பட்ட துணை சிறப்பு அமர்வுகள் மற்றும் 5 ஃபெல்லோஷிப் படிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. ஐ ஏ ஜி ஈ எஸ் இன் தலைவர் டாக்டர் எஸ் ஈஸ்வரமூர்த்தி, அமைப்பு தலைவர் டாக்டர் ஏ ஜமீர் பாஷா மற்றும் எஃப் ஏ எல் எஸ் போர்ட் இன் தலைவர் டாக்டர் ரந்தீப் வாத்வான் ஆகியோரால் இந்த மாநாடு நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பேசிய ஐ ஏ ஜி ஈ எஸ் இன் தலைவர் டாக்டர் எஸ் ஈஸ்வரமூர்த்தி, "ஐ ஏ ஜி ஈ எஸ் ஆனது குறைந்தபட்ச அணுகல் அறுவை சிகிச்சையின் உலகளாவிய அரங்கில் மிகப்பெரிய கல்வி தளங்களில் ஒன்றாக வளர்ந்துள்ளது. ஐ ஏ ஜி ஈ எஸ் இன் 21வது தேசிய காங்கிரஸில் நாங்கள் மிகவும் பெருமையுடன் இங்கு கூடியுள்ளோம். எங்களுடன் சுமார் ஏறக்குறைய 1500 பிரதிநிதிகளும் 150 தேசிய மற்றும் 50 சர்வதேச ஆசிரிய குழுக்களும் இந்த கல்வி விழாவை உண்மையிலேயே குறிப்பிடத்தக்க உலகளாவிய கல்வி நிகழ்வாக உருவாக்கினோம். கடந்த சில ஆண்டுகளில், உடல் நல பராமரிப்புத் துறை அபரிமிதமான தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கண்டுள்ளது மற்றும் இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பது, ஒரு பாக்கியமாக இருந்து வருகிறது. பொதுவான மற்றும் இரைப்பை குடல் அறுவை சிகிச்சையின் முக்கிய முன்னேற்றங்களில் ஒன்று டா வின்சி போன்ற மேம்பட்ட அறுவை சிகிச்சை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்படும் ரோபோ-உதவி அறுவை சிகிச்சை ஆகும். இந்த ஆண்டு மாநாட்டின் கருப்பொருளான கண்டுபிடிப்பு, பாதுகாப்பு மற்றும் தனிச்சிறப்பு ஆகியவற்றில் தனிச்சிறப்பாக இருப்பதன் மூலம் பொது அறுவை சிகிச்சை நடைமுறைகளுக்கான ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சை போன்ற அதி நவீன எம் ஏ எஸ் (குறைந்த அணுகல் அறுவை சிகிச்சை) தொழில்நுட்பங்களில் அறுவை சிகிச்சை நிபுணர்களை கற்பிப்பதிலும் மற்றும் பயிற்சி அளிப்பதிலும் நாங்கள் அதிக கவனம் செலுத்தினோம். பல்வேறு இடங்களைச் சேர்ந்த அறுவைசிகிச்சை நிபுணர்களின் உற்சாகமான பங்கேற்பின் அளவைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் மற்றும் உலகம் முழுவதும் உள்ள அறுவை சிகிச்சை நிபுணர்கள் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும், மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளவும் ஊக்குவிக்கிறோம்."என்று கூறினார். நேரடி செயல் விளக்கங்கள், பயிற்சி மற்றும் நேரடி விரிவுரைகள் ஆகியவற்றுடன் ஈ எஃப்ஜ ஏ ஜி ஈ எஸ், எஃப்ஜ ஏ ஜி ஈ எஸ், எஃப்ஏ ஜி ஐ ஈ கொலோனோஸ்கோபி, எஃப் ஏ எல் எஸ் குடலிறக்கம் மற்றும் எஃப் ஏ எல் எஸ் ரோபோடிக் ஹெர்னியா அறுவை சிகிச்சை ஆகியவை இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட சில பாடநெறிகளாகும். இந்த மாநாடு பல அமர்வுகள் மற்றும் இந்த தொழில்துறை நிபுணர்களின் உரைகள் மற்றும் ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சை பற்றிய குழு விவாதங்கள் ஆகியவற்றை மேலும் உள்ளடக்கியது. எஃப் ஏ எல் எஸ் போர்ட் இன் தலைவர் டாக்டர். ரந்தீப் வாதவான் ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சையில் இந்த ஃபெலோஷிப் திட்டம் குறித்து கருத்து தெரிவிக்கையில்,, "அறுவை சிகிச்சையில் பயன்படுத்தப்படும் புதிய-யுக தொழில்நுட்பங்கள் பற்றிய விவாதம் மற்றும் ஆய்வுகளை ஊக்குவிக்க இதுபோன்ற படிப்புகள் அவசியமாக இருக்கின்றன. ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சை போன்ற புதுமையான தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதில் கவனம் செலுத்தும் அதே வேளையில் நாடு முழுவதும் அவற்றின் அணுகலை எவ்வாறு அதிகரிப்பது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஐ ஏ ஜி ஈ எஸ் ஆனது 2021 டிசம்பரில் ரோபோடிக் அறுவை சிகிச்சையில் முதல் பெல்லோஷிப் படிப்பை தில்லி யில் நடத்தியது, அங்கு 100 க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை நிபுணர்கள் இந்தத் துறையில் உள்ள தலைவர்களால் பயிற்சி பெற்றனர். எஃப் ஏ எல் எஸ் போர்ட் இன் தலைவராக, டா வின்சி போன்ற மேம்பட்ட ரோபோ அமைப்புகளின் உதவியுடன் அறுவை சிகிச்சை நிபுணர்கள் தங்கள் பயிற்சி முறையை மாற்றுவதை நான் கண்டிருக்கிறேன். சமீப காலங்களில் ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சையை ஏற்றுக்கொள்வதில் ஒரு அதிகரிப்பையும் நாங்கள் கண்டோம். எவ்வாறாயினும், நமது உடல்நல பராமரிப்பு அமைப்பில் உள்ள நோய்ச் சுமையை நிவர்த்தி செய்ய, மேம்பட்ட அறுவை சிகிச்சை தொழில்நுட்பங்களின் செயல்படுத்துதலை நாம் மேலும் மேம்படுத்த வேண்டும், மேலும் இது போன்ற முயற்சிகள் அதற்குத் தேவையான சூழலை உருவாக்க உதவ முடியும். இந்த மாநாடு முன்னணி ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சை தொழில்நுட்பங்கள் பற்றிய ஒரு விரிவான திட்டத்தை உருவாக்கியது. இந்தியா முழுவதும் வளரும் அறுவை சிகிச்சை நிபுணர்களின் உற்சாகமான பங்கேற்பைக் காண்பது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இது போன்ற படிப்புகள் கொண்ட மாநாடுகள் இறுதியில் ரோபோடிக் அறுவை சிகிச்சையின் பலன்களை அதிக மக்களுக்கு விரிவுபடுத்த உதவும், இதில் சிறந்த மருத்துவ முடிவுகள், குறைந்த இரத்த இழப்பு, குறைந்த வலி, குறைந்தபட்ச மருத்துவமனையில் தங்குதல் போன்றவை அடங்கும்." என்று கூறினார். இந்த அமைப்பு சுமார் 10,000 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது மற்றும் அவர்களின் முதன்மையான லேப்ராஸ்கோபிக் பாடமான எஃப்ஜ ஏ ஜி ஈ எஸ் மூலம் 7,000 க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு ஏற்கனவே லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சையில் பயிற்சி அளித்துள்ளது. இது தவிர, அவர்கள் ஈ எஃப்ஜ ஏ ஜி ஈ எஸ் (எண்டோஸ்கோபி மற்றும் கொலோனோஸ்கோபி பயிற்சி), எஃப் ஏ எல் எஸ் (துணை சிறப்புகள் பற்றிய படிப்புகள்), மற்றும் எஃப்ஏ ஜி ஐ ஈ (மேம்பட்ட எண்டோஸ்கோபி படிப்பு) போன்ற படிப்புகள் மூலம் தொடர்ந்து பயிற்சி அளித்துள்ளனர். இந்த மாநாட்டின் போது, ஐ ஏ ஜி ஈ எஸ், பெல்லோஷிப் பங்கேறப்பாளர்களுக்கான ஒரு பட்டமளிப்பு விழாவையும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள் பங்கேற்ற பாராட்டு விழாவையும் நடத்தியது. ■

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஓகே பிளே இந்தியா நிறுவனத்தின் 1:10 பங்கு பிரிப்பு நடவடிக்கைக்கு இயக்குனர் குழு ஒப்புதல்

சென்னை, 07 பிப் 2024: பிளாஸ்டிக் மோல்டடு ஃபர்னிச்சர், வெளியரங்க விளையாட்டு சாதனங்கள், பிஓபி தயாரிப்புகள், ஆட்டோமோட்டிவ் பாகங்கள் மற்றும் எலெட்ரிக் பாகங்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் ஒரு முன்னணி நிறுவனமான ஓகே பிளே இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகளை 1:10 என்ற விகிதத்தில் பகுப்பதற்கு தனது இயக்குனர் குழு ஒப்புதல் அளித்திருப்பதாக அறிவித்திருக்கிறது. ஒவ்வொன்றும் ரூ.10 முகமதிப்புள்ள ஒரு ஈக்விட்டி பங்கும், ஒவ்வொன்றும் ரூ.1 முகமதிப்புள்ள 10 ஈக்விட்டி பங்குகளாகப் பிரிக்கப்படும். தேவைப்படுகின்ற ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு இந்த முடிவு உட்பட்டது. ஜெர்மனியின் மான் + ஹம்மெல் குழுமத்தின் துணை நிறுவனமான ஜெர்மனியின் மான் + ஹம்மெல் ஃபில்ட்டர் பிரைவேட் லிமிடெட் -ன் புரட்சிகரமான புதிய தயாரிப்பான “ப்யூர்ஏர் மொபைல் ஃபைன் என்ற மொபைல் நுண்துகள், ஃபில்ட்ர் ரூஃப் பாக்ஸ் என்பதை விளம்பரப்படுத்தவும், வினியோகிக்கவும், நிறுவவும், சர்வீஸ் செய்யவும் அதன் ஒரே மற்றும் பிரத்யேக வினியோகஸ்தராக இந்தியாவில் செயல்படுவதற்கான ஒப்பந்தத்தை தனக்கு முற்றிலும் சொந்தமான எம்ஆர்எஸ் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் வழியாக மேற்கொண்டிருக்கும் தகவலை ஓகே பிளே இந்தியா நிறுவனம் அறிவித்திருக்கிறது. காற்றுமாசு என்ற பயங்கர ஆபத்தை எதிர்த்துப் போரிடுவதற்கான புதுமையான தயாரிப்பு இது. 80-க்கும் அதிகமான நாடுகளிலும் மற்றும் கடந்த 18 ஆண்டுகளாக இந்தியாவிலும் இயங்கி வரும் 4.8 மில்லியன் யூரோப் மதிப்புள்ள, ஜெர்மன் நாட்டின் பிரபல பன்னாட்டு நிறுவனமாக மான் + ஹம்மெல் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. தனது மேம்பட்ட ஃபில்ட்டரேஷன் (வடிகட்டல்) தொழில் உத்திகளையும் மற்றும் நவீன தொழில்நுட்பத்தையும் சிறப்பாக பயன்படுத்தி, மிகச்சிறிய தூசித்துகள்களை திறனுடன் வடிகட்டி ஈர்ப்பதன் மூலம் நுண்துகள் மாசுவை எதிர்த்து போரிடுகின்ற ஒரு நம்பகமான, திறனுள்ள தயாரிப்பை இந்த மான் ஹம்மெல் உருவாக்கியிருக்கிறது. அறைகளில் உள்ள காற்றிலிருந்து பி எம்2.5 மற்றும் பி எம்10 உட்பட, ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கின்ற நுண்துகள்களை ஈர்த்து, வடிகட்டி தூய்மையான காற்றை வழங்கக்கூடிய சாதனம் இது. தயாரிப்பிற்கு உகந்ததாக, வெற்றிகரமாக இது பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. வாகனங்களில் மட்டுமன்றி, நகர்வின்றி ஒரே இடத்தில் இருக்கின்ற அமைவிடங்களிலும் பொருத்துவதற்கு ஏற்றவாறு இத்தயாரிப்பு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தம் குறித்து கருத்து தெரிவித்த ஓகே பிளே நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. ராஜன் ஹண்டா கூறியதாவது: “மாசுவைக் கட்டுப்படுத்த காற்றை வடிகட்டி வழங்கும் தீர்வுகள் தளத்தில் உலகளவில் பிரபலமான முதன்மை நிறுவனமாகத் திகழும் மாண் + ஹம்மெல் உடன் எமது வினியோக ஏற்பாட்டை அறிவித்ததில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். நிறுவனத்திற்கு மட்டுமின்றி, நமது நாடு முழுவதற்கும் இவ்வொப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். இந்தியாவில் காற்று மாசு பிரச்சனைக்கு ஒரு மிகப்பெரிய நிவாரணமாகத் திகழும் திறன்கொண்ட தயாரிப்பு இது. பொதுமக்களின் உடல்நலத்திற்கும் மற்றும் சுற்றுச்சூழலுக்கும் கணிசமான பாதிப்பு விளைவுகளை காற்று மாசு விளைவிக்கிறது. மிகச்சிறிய நுண்துகள்களின் எதிர்மறை பாதிப்புகளுள், சுவாச மண்டல அமைப்பிலும் மற்றும் இதய நாள ஆரோக்கியத்தின் மீதும் மற்றும் வாழ்க்கையின் ஒட்டுமொத்த தரம் மீதும் மோசமான பாதிப்புகளும் இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் கூடுதலாக, காற்று தர குறியீட்டின் அதிகரித்த அளவுகள் சிறார்களுக்கும் மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கும் கடுமையான உடல்நல அச்சுறுத்தலை ஏற்படுத்துவதால், இதற்கு அவசரமாக உடனடி பதில்வினையாற்றுவது இன்றியமையாததாக மாறியிருக்கிறது. டால்பெர்க் அட்வைசர்ஸ், ப்ளூஸ்கை அனலிடிக்ஸ் மற்றும் இந்திய தொழில்துறை கூட்டமைப்பு ஆகிய அமைப்புகள் வெளியிட்ட அறிக்கையின்படி, ஒவ்வொரு ஆண்டும் இந்திய தொழில் நிறுவனங்கள் ரூ.7 இலட்சம் கோடிக்கும் அதிகமான தொகை இழப்பீட்டை சந்திக்கின்றன. காற்று மாசுவின் பாதிப்புகளை குறைப்பதற்காக கட்டுமானப்பணி மற்றும் உற்பத்தி செயல்பாடுகள் மீது அரசு கட்டுப்பாடுகள் விதிப்பதால் இந்த இழப்பு ஏற்படுகிறது என்பதை அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.”

# பஜாஜ் அலையன்ஸ் லைஃப், தமிழ்நாட்டில் காப்பீட்டை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகிறது

சென்னை, 07 பிப் 2024: இந்தியாவின் முன்னணி தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான பஜாஜ் அலையன்ஸ் லைஃப் இன்சூரன்ஸ், வாடிக்கையாளர்களுக்கு மதிப்பு நிரம்பிய ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களுடன் வலுவூட்டுவதற்காக, இந்தியா முழுவதிலும் குறிப்பாக தமிழகத்திலும் அதன் விநியோகத் தடத்தை மேம்படுத்தி வருகிறது. நிறுவனம் வலுவான பல சேனல் விநியோக அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது, நாடு முழுவதும் உள்ள நிதி நிறுவனங்களுடனான கூட்டுறவில் குறிப்பிட்ட கவனம் செலுத்துகிறது. இந்த வணிக சேனல் நிறுவனத்திற்குள் நிறுவன வணிகம் என்று குறிப்பிடப்படுகிறது.

இன்று, பஜாஜ் அலையன்ஸ் லைஃப் இன்சூரன்ஸ், 33 முன்னணி வங்கிகளை உள்ளடக்கிய, நாட்டில் உள்ள 82 டிற்கு மேற்பட்ட நிதி நிறுவனங்களுடன் மூலோபாய கூட்டாண்மைகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, சிட்டி யூனியன் வங்கி, கரூர் வைஸ்யா வங்கி மற்றும் ஈக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி போன்ற தமிழ்நாட்டை தலைமையிடமாகக் கொண்ட நான்கு முக்கிய வங்கிகளுடன் நிறுவனம் கூட்டு சேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தின் நிறுவன வணிகத்தைப் பற்றி கருத்து தெரிவித்த பஜாஜ் அலையன்ஸ் லைஃப் நிறுவன வணிகத்தின் தலைமை விநியோக அதிகாரி திரு. தீரஜ் சேகல், "பிரிவுகளில் உள்ள வாடிக்கையாளர்களின் நீண்ட கால வாழ்க்கை இலக்குகளை நிறைவேற்ற நாங்கள் எங்களை அர்ப்பணித்துள்ளோம், மேலும் எங்கள் தயாரிப்பு தொகுப்பை மேம்படுத்துவதில் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறோம். மற்றும் அதன் சேவைகள், எங்கள் மூலோபாய கூட்டாளர்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். அவர்கள் எங்களை மாநிலம் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களைச் சென்றடையச் செய்திருக்கிறார்கள், மேலும் இந்த கூட்டாண்மைகளை சாத்தியமான எல்லா வழிகளிலும் வளர்க்க நாங்கள் எதிர்நோக்குகிறோம். இதுவே எங்கள் வலுவான தொழில்நுட்பக் கட்டமைப்பு, தற்போதுள்ள மற்றும் புதிய கூட்டாளர்கள் எங்களுடன் தடையின்றி ஒருங்கிணைத்து வாடிக்கையாளர்களுக்கு எளிதான மற்றும் பாதுகாப்பான முறையில் சேவை செய்வதை உறுதிசெய்யும் வகையில், தொழில்துறையின் மிகச்சிறந்த நிறுவனங்களில் ஒன்று." என்று நாங்கள் நம்புகுறோம்.

பஜாஜ் அலையன்ஸ் லைஃப் நிறுவன வணிகக் கண்ணோட்டம்

நாடு முழுவதும் உள்ள மூலோபாய கூட்டாண்மை மூலம், பஜாஜ் அலையன்ஸ் லைஃப் வலுவான வளர்ச்சியை கண்டுள்ளது, குறிப்பாக கடந்த ஐந்து ஆண்டுகளில். 2019 முதல் 2023 வரை, நிறுவனத்தின் நிறுவன வணிகமானது, தனிநபர் மதிப்பிடப்பட்ட புதிய வணிகத்தின் (ஐ ஆர் என் பி) அடிப்படையில் 65% என்ற வலுவான கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை (சி ஏ ஜி ஆர்) அடைந்துள்ளது. குறிப்பாக, ஒய் டி டி டிசம்பர் 2023 இல், பஜாஜ் அலையன்ஸ் லைஃப்டின் நிறுவன வணிகம், ஐ ஆர் என் பி இல் 18% வளர்ச்சியைக் கண்டுள்ளது.

தமிழ்நாட்டில், பஜாஜ் அலையன்ஸ் லைஃப் இன் இன்ஸ்டிடியூஷனல் பிசினஸ் ஒய் டி டி டிசம்பர் 2023 இல் ஐ ஆர் என் பி அடிப்படையில் குறிப்பிடத்தக்க 52% வளர்ச்சியைப் பதிவு செய்தது. பிராண்டின் மீது வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தொடர்பு, விற்கப்பட்ட பாலிசிகளின் எண்ணிக்கையும் (என் ஓ பிஸ்) குறிப்பிடத்தக்க உயர்வைச் சந்தித்தது, ஒய் டி டி டிசம்பர் 2023 இல் 53% அதிகரிப்பு ஏற்பட்டது.

பஜாஜ் அலையன்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் உடன் ஒரு மூலோபாய கூட்டாண்மையை உருவாக்குவதன் நன்மை:

பஜாஜ் அலையன்ஸ் லைஃப் 2017 ஆம் ஆண்டிலிருந்து ஒரு மாற்றமான பயணத்தை மேற்கொண்டுள்ளது, இந்த ஆண்டுகளில் அனைத்து அளவுருக்களிலும் ஈர்க்கக்கூடிய வளர்ச்சியை அடைந்துள்ளது. விநியோகச் சேனலை மேம்படுத்துதல், டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப-முதல் அணுகுமுறையை ஏற்றுக்கொள்வது மற்றும் வாடிக்கையாளர்கள் தங்கள் நீண்ட கால வாழ்க்கை இலக்குகளை நிறைவேற்ற உதவும் வகையில் புதுமையான, முதல்-வகையான தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் வளர்ச்சி தூண்டப்பட்டது. இது அவர்களின் மூலோபாய கூட்டாண்மைகளுக்கு இடையே ஒரு வலுவான வேறுபாட்டை நிறுவ நிறுவனத்திற்கு உதவுகிறது.

இன்று, நிறுவனம் தனது கூட்டாளர்களுக்கு பெஸ்போக் பான்கா அனுபவத்தை வழங்குகிறது, எந்தவொரு கூட்டாளரையும் எளிமையாக பிளக் அண்ட்-ப்ளே செய்ய உதவும் அதிநவீன டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப கட்டமைப்பை வழங்குகிறது. திறன் பெற்ற குழுக்கள் கூட்டாளர்களுடன் தொடர்ந்து ஈடுபடுகின்றன, கூட்டாளர்களின் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு தனிப்பயனாக்கப்பட்ட தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை வழங்குகின்றன. இந்த முழுமையான அணுகுமுறை பஜாஜ் அலையன்ஸ் லைஃப் நீண்ட காலத்திற்கு நீடித்த மற்றும் பலனளிக்கும் கூட்டாண்மைகளைப் பேணுவதை உறுதி செய்துள்ளது.

பஜாஜ் அலையன்ஸ் லைஃப், இந்தியாவின் மிக வேகமாக வளர்ந்து வரும் தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றாகும்

நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக புதிய தயாரிப்புகளில் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது மேலும் சில தனித்துவமான சுய சேவை விருப்பங்களை வழங்குகிறது. அதிக செயல்திறனை உறுதி செய்வதற்கும் உள் மற்றும் வெளிப்புறமாக எளிதாக்குவதற்கும் இது செயல்முறைகளை உருவாக்கி புதிய தொழில்நுட்பத்தை மேம்படுத்துகிறது. இந்த தொடர்ச்சியான வளர்ச்சி அணுகுமுறையானது, பஜாஜ் அலையன்ஸ் லைஃப், வேகமாக வளர்ந்து வரும் தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது, ஒய் டி டி டிசம்பர், 2023 இல் ஐ ஆர் என் பி இல் 24% வளச்சியையும், அதே காலகட்டத்தில் ஒப்பிடும்போது ஐ ஆர் என் பி இல் 7% வளர்ச்சியுடன் தொழில்துறையில் வளர்ச்சியை கண்டுள்ளது.

பஜாஜ் அலையன்ஸ் லைஃப் 4.30 கோடி உள்ளடக்கியது மற்றும் நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்களை ரூ. 1,00,000 கோடிகள் (ஒரு லட்சம் கோடி ரூபாய், ஒய் டி டி டிசம்பர் 2023 இன் படி). கூடுதலாக, நிறுவனம் 99.04% என்ற ஈர்க்கக்கூடிய தீர்வு விகிதத்தை எட்டியுள்ளது மற்றும் 2022-23 நிதியாண்டில் 516% கடனளிப்பு விகிதத்தை பராமரிக்கிறது."

# மகாராஷ்டிரா உணவு பதப்படுத்துதல் மற்றும் குளிர்பதன சேமிப்பகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள எச் எம் ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ்!

சென்னை, 07 பிப் 2024: கையாளப்படும் உணவுகள் மற்றும் விவசாயப் பொருட்களில் முன்னணியில் உள்ள எச் எம் ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ், மகாராஷ்டிரா உணவு பதப்படுத்துதல் மற்றும் குளிர்பதன சேமிப்பகம் என்னும் ஒரு கூட்டு நிறுவனத்துடன், முறையாக உணவுத்தர பாலிதீன் பைகளில் அடைக்கப்பட்ட, உறைந்த ஹலால் எலும்பற்ற எருமை இறைச்சியின் உருவாக்கம், குளிர்வித்தல், பதப்படுத்துதல், உறைய வைத்தல் மற்றும் பேக்கிங் ஆகியவற்றுக்கான வசதிகளை அளிப்பதற்கான ஒப்பந்தம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

முன்னதாக, இந்த நிறுவனம் 1:10 என்ற விகிதத்தில் ஒரு பங்குப் பிரிப்பைச் செயல்படுத்தியது அதாவது ஒவ்வொன்றும் ரூ. 10 முகமதிப்பு கொண்ட ஒவ்வொரு ஈக்விட்டி பங்கின் துணைப்பிரிவு/பிரிவிற்கும், ரூ. 1 முகமதிப்பு கொண்ட, ஒவ்வொன்றும் முழுமையாகச் செலுத்தப்பட்ட பத்து ஈக்விட்டி பங்குகளாக முழுமையாகச் செலுத்தப்பட்டது. மேலே கூறப்பட்ட பங்குப் பிரிப்பிற்கான பதிவுத் தேதி டிசம்பர் 29, 2023 ஆகும். 2024-ஆம் ஆண்டிற்கான இரண்டாம் காலாண்டில், நிறுவனத்தின் வருவாய் ரூ. 11,847 மில்லியன், வட்டி, வரிகள், தேய்மானம், கடன் தவணை செலுத்துதல் ஆகிய செலவீனங்கள் கழிக்கப்படும் முன் உள்ள வருவாய் (ஈ பி ஐ டி டி ஏ) ரூ. 566.44 மில்லியன், வரிக்கு முந்தைய லாபம் (பி பி டி) ரூ.530.95 மில்லியன் மற்றும் வரிக்குப் பிந்தைய லாபம் (பி ஏ டி) ரூ. 381.68 மில்லியன் என அறிவிக்கப்பட்டது. 2024-ஆம் ஆண்டிற்கான முதலாம் அரையாண்டில், நிறுவனத்தின் வருவாய் ரூ. 21,455 மில்லியன், வட்டி, வரிகள், தேய்மானம், கடன் தவணை செலுத்துதல் ஆகிய செலவீனங்கள் கழிக்கப்படும் முன் உள்ள வருவாய் (ஈ பி ஐ டி டி ஏ) ரூ. 1178.59 மில்லியன், வரிக்கு முந்தைய லாபம் (பி பி டி) ரூ. 1101.66 மில்லியன் மற்றும் வரிக்குப் பிந்தைய லாபம் (பி ஏ டி) ரூ. 808.88 மில்லியன் என அறிவிக்கப்பட்டது. எச் எம் ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் உணவு வர்த்தக அமைப்பாகச் செயல்படுகிறது. இந்த நிறுவனம் உறைந்த புதிய எருமை இறைச்சி, தயாரிக்கப்பட்ட மற்றும் உறைந்த இயற்கைப் பொருட்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்கள் உள்ளிட்ட கையாளப்படும் உணவுகள் மற்றும் விவசாயப் பொருட்களை வழங்குகிறது. எச் எம் ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் உலகளாவிய அளவில் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கிறது. இந்த நிறுவனம் நாளொன்றுக்கு 1472 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் சிறப்பு வாய்ந்த உற்பத்தி மையங்கள் ஆக்ரா, உன்னோ, பஞ்சாப், அலிகார், மேவாட் மற்றும் பிரபாஹனி ஆகிய ஆறு நகரங்களில் பரந்து விரிந்து காணப்படுகிறது. இந்த நிறுவனம் உற்பத்தி மற்றும் சில்லறை விற்பனைக்காக முழுவதும் தானியங்கி வசதியுடன், முழுவதுமாக ஒருங்கிணைக்கப்பட்ட உள்கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இந்த நிறுவனமானது செயல்திட்ட அடிப்படையில் குறைவான லாப வாய்ப்பு உள்ள நாடுகளில் விற்பனையைக் குறைத்துக் கொண்டு, அதிக லாப வாய்ப்பு உள்ள சந்தைகளை நோக்கி படிப்படியாக நகர்ந்து வருகிறது.

# ராபிடோ அதன் 3 லட்சத்துக்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட கேப்டன்களுக்கு சென்னையில் இலவச கண் பரிசோதனைகளை வழங்குகிறது

சென்னை, 07 பிப் 2024: பைக் டாக்சி, ஆட்டோ மற்றும் கேப் சேவைகளை வழங்கும் ஒரு முன்னணி ஒருங்கிணைப்பாளர் தளமான ராபிடோ, அதன் கேப்டன்களின் தரமான கண் பராமரிப்பை உறுதி செய்வதன் மூலம் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த ஷெல் ஃப்ளீட் சொல்யூஷன்ஸ் உடன் கூட்டு சேர்ந்து “டிரைவ் சேஃப் இந்தியா” பிரச்சாரத்தின் அறிமுகத்தை அறிவித்துள்ளது. இந்த பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, ராபிடோ அதன் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட பதிவுசெய்யப்பட்ட பைக் டாக்ஸி, ஆட்டோ மற்றும் கேப் கேப்டன்களுக்கு இலவச கண் பரிசோதனை மற்றும் இலவச கண்ணாடிகளை சென்னை கிண்டியில் உள்ள அதன் நகர அலுவலகத்தில் வழங்குகிறது.

இதுவரை, ஜனவரி 19, 2024 அன்று தொடங்கப்பட்ட இந்த ஒரு மாத கால பிரச்சாரத்திற்கு சுமார் 45,000 க்கும் அதிகமான கேப்டன்கள் பதிவு செய்வார்கள் என்று ராபிடோ எதிர்பார்க்கிறது. இந்த கண் பரிசோதனைகளில் பங்கேற்பதன் மூலம் ராபிடோ கேப்டன்கள், சரியான நேரத்தில் தலையீட்டிற்கு வழி வகுக்கின்ற சாத்தியமான பார்வை குறைபாடுகளை முன்கூட்டியே கண்டறியலாம். வாகனம் ஓட்டுவதற்கு, குறிப்பாக சாலை அடையாளங்களைத் துல்லியமாகப் படிக்க, நல்ல கண் ஆரோக்கியம் அவசியமானதாக இருக்கிறது. இலவச கண் பரிசோதனைகளை வழங்குவதன் மூலம், பாதுகாப்பான வாகனம் ஓட்டும் நடைமுறைகளுக்குத் தடையாக இருக்கும் எந்தவொரு அடிப்படை பார்வைப் பிரச்சினைகளையும் அதன் கேப்டன்கள் தீர்க்க முடியும் என்பதை ராபிடோ உறுதிசெய்கிறது.

இந்த முன்முயற்சி குறித்து பேசிய ராபிடோ இன் இணை நிறுவனர் பவன் குண்டுபள்ளி, 'ராபிடோ இல், எங்கள் கேப்டன்கள் மற்றும் ரைடர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம். குறைந்த பார்வை கொண்ட கேப்டன்கள் போக்குவரத்து விதிமுறைகளுக்கு இணங்கத் தவறலாம். இது போன்ற சூழ்நிலைகளைத் தவிர்க்கவும் மற்றும் எங்கள் ராபிடோ கேப்டன்கள், பயணிகள் மற்றும் சாலையில் செல்லும் பிற பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, இலவச கண் பரிசோதனைகள் மற்றும் இலவச கண்கண்ணாடிகளை வழங்குவதற்காக இந்த பிரச்சாரத்தை நாங்கள் ஏற்பாடு செய்கிறோம். பார்வைக் குறைபாட்டால் ஏற்படும் விபத்துகளின் அபாயத்தைக் குறைக்கவும், பயணம் முழுவதும் பயணிகள் மற்றும் கேப்டன்கள் இருவருக்கும் பாதுகாப்பான சவாரி அனுபவத்தை வழங்கவும் இந்த முயற்சி உதவும்."என்று கூறினார். ராபிடோ இன் இந்த வெற்றியில் கேப்டன்களின் முக்கிய பங்கை அங்கீகரிக்கின்ற வகையில், ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்காக இந்த விரிவான உடல்நல பாதுகாப்பு பிரச்சாரத்தை இந்த நிறுவனம் சென்னையில் மேற்கொண்டுள்ளது. இந்த பிரச்சாரமானது அதன் கேப்டன்களின் மீதான அக்கறை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றின் ஒரு கலாச்சாரத்தை வளர்ப்பதில் ராபிடோ இன் உறுதிப்பாட்டுடன் ஒத்துப்போகிறது. இலவச கண் பரிசோதனைகளை வழங்குவதன் மூலம், கேப்டன்கள் எதிர்கொள்ளக்கூடிய பார்வை தொடர்பான ஏதேனும் பிரச்சனைகளை முன்கூட்டியே தீர்க்க நிறுவனம் நோக்கமாக உள்ளது.